தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்
## 26.12.2012 A.M

### அலங்கார செடி வளர்ப்புப் பயிற்சி

அலுவலகம் மற்றும் வீட்டினுள் எளிய முறையில் அலங்கார செடி வளர்த்து பராமரிப்பது குறித்த பயிற்சி வரும் 28-ம் தேதி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் தகவல் மற்றும் பயிற்சி மையத்தில் நடைபெறுகிறது. மேலும் விவரங்களுக்கு 26263484 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

### கால்நடை , மீன் வள தொழில்நுட்ப கண்காட்சி 28-ல் தொடக்கம்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில், கோவை மண்டல கால்நடை மற்றும் மீன் வள தொழில்நுட்பக் கண்காட்சி டிசம்பர் 28 ஆம் தேதி தொடங்குகிறது.

இதுதொடர்பாக, பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர்.பிரபாகரன் வெளியிட்ட செய்தி:

கோவை சாய்பாபா காலனியில் உள்ள டி.ஏ.ராமலிங்க செட்டியார் மேல்நிலைப் பள்ளியில், டிசம்பர் 28 ஆம் தேதி தொடங்கி 30 ஆம் தேதி வரை கண்காட்சி நடைபெறுகிறது.

இதில் 80-க்கும் மேற்பட்ட அரங்குகளில் கறவை மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, நாட்டுக் கோழி வளர்ப்பு, முயல் வளர்ப்பு, வான்கோழி வளர்ப்பு, வெண் பன்றி

வளர்ப்பு, நன்னீர் மீன் வளர்ப்பு, இறால் வளர்ப்பு, மீன் பொருட்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பு, பசுந்தீவன உற்பத்தி, கலப்பு பண்ணையம், பண்ணைக் கழிவு மேலாண்மை குறித்த அறிவியல் தொழில்நுட்பங்கள், துண்டுப் பிரசுரங்கள், குறுந்தகடுகள், தொலைக்காட்சிப் படங்கள், புத்தகங்கள் மூலம் வழங்கப்பட உள்ளன.

மேலும், பண்ணையாளர்களுக்குத் தேவையான பசுந்தீவன விதைகள் மற்றும் விதைக் கரணைகளும் கண்காட்சியில் விற்பனை செய்யப்பட உள்ளன.

நாய், பூனை போன்ற செல்லப் பிராணிகள் பராமரிப்பு, உணவு வகைகள், தடுப்பூசி அட்டவணை, அறுவை சிகிச்சை முறைகள் பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட உள்ளன.

டிச.29-ல் செல்லப் பிராணிகள் கண்காட்சி: டிசம்பர் 29 ஆம் தேதி செல்லப் பிராணிகள் கண்காட்சி நடைபெற உள்ளது. பல்கலைக்கழக பட்டப் படிப்புகள், வேலைவாய்ப்புகள், தொலைதூரக் கல்வித் திட்டங்கள், சுய வேலைவாய்ப்பு பயிற்சி குறித்த தகவல்களும் இடம்பெறுகின்றன.

இக்கண்காட்சிக்கு நுழைவுக் கட்டணம் எதுவும் இல்லை. கண்காட்சி நடைபெறும் நாட்களில் காலை 11 மணி முதல் மாலை 7 மணி வரை பார்வையாளர்கள் காணலாம் என தெரிவித்துள்ளார்.

## 28-ல் விவசாயிகள் முறையீட்டுக் கூட்டம்

கோவை மாவட்ட விவசாயிகள் முறையீட்டுக் கூட்டம் டிசம்பர் 28 ஆம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன் தலைமையில் நடைபெறவுள்ள முறையீட்டுக் கூட்டத்தில் கோவை மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டு, வேளாண்மை தொடர்பான பிரச்னைகளுக்கு மனுக்கள் அளிக்கலாம் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## கோபியில் வாழைத்தார் ஏலம்

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் வாழைத்தார் ஏலம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதில், கதளி கிலோ ரூ.31-க்கும், நேந்திரன் ரூ.23-க்கும், செவ்வாழைத் தார் ரூ.450- க்கும், ரஸ்தாளி ரூ.400-க்கும், ரொபஸ்ட்டா ரூ.370-க்கும், பூவன் தார் ரூ.275-க்கும், தேன்வாழை ரூ.425-க்கும், மொந்தன் ரூ.250-க்கும், பச்சைநாடன் தார் ரூ.210-க்கும் அதிகபட்சமாக விலைபோனது. 8 ஆயிரம் வாழைத்தார்கள் ரூ.7 லட்சத்திற்கு விற்பனையாகின.

தேங்காய் ஏலத்தில், தேங்காய் ஒன்று குறைந்தபட்சமாக ரூ.5-க்கும், அதிகபட்சமாக ரூ. 10-க்கும் விற்பனையாகியது.

6 ஆயிரம் தேங்காய்கள் ரூ.35 ஆயிரத்திற்கு விற்பனையாகின.

## வியாபாரிகளின் தக்காளிகளை சாலையில் வீசியெறிந்த விவசாயிகள்

திருப்பூர் தெற்கு உழவர் சந்தை விவசாயிகள், சாலையோரத்தில் வியாபாரிகள் விற்பனைக்கு வைத்திருந்த தக்காளிகளை சாலையில் வீசியெறிந்தனர். அதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து, வியாபாரிகள் செவ்வாய்க்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர்.

÷திருப்பூரில் பல்லடம் சாலையில் தெற்கு உழவர் சந்தை உள்ளது. இதையொட்டி, மாநகராட்சி காய்கறி சந்தை உள்ளது. உழவர் சந்தையில் விவசாயிகள், தாங்கள் நேரடியாக விளைவிக்கும் காய்கறிகளை விற்பனை செய்து வருகின்றனர். இதற்காக விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை மூலமாக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

தெற்கு உழவர் சந்தையையொட்டிய சாலையிலும், பல்லடம் சாலையிலும் வியாபாரிகள் காய்கறிகள் விற்பனை செய்து வருகின்றனர்.

இதனால், உழவர் சந்தை விவசாயிகளுக்கும், காய்கறி வியாபாரிகளுக்கும் இடையே அடிக்கடி பிரச்னை ஏற்படுகிறது.

÷வியாபாரிகள் சாலையோரத்தில் காய்கறிகள் விற்பனை செய்வதற்கு உழவர் சந்தை விவசாயிகள் தொடர்ந்து கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இதுதொடர்பாக திங்கள்கிழமை ஆட்சியர் கு.கோவிந்தராஜிடம் விவசாயிகள் கோரிக்கை மனு கொடுத்தனர்.

இந் நிலையில், செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணியளவில் உழவர் சந்தை விவசாயிகள், அப் பகுதியில் சாலையோரத்தில் காய்கறி வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வியாபாரிகளின் தக்காளிக் கூடைகளை சாலையில் வீசியெறிந்தனர். 4 டன் எடையுள்ள தக்காளிகள் சாலையில் சிதறிக் கிடந்தன.

இதனால் அதிர்ச்சியடைந்த வியாபாரிகள் சாலை மறியலில் ஈடுபட்டனர். தக்காளிகளை வீசியெறிந்த விவசாயிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினர்.

தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற துணைக் கண்காணிப்பாளர் ராஜாராம், இன்ஸ்பெக்டர் ஈஸ்வரன் வியாபாரிகளிடம் சமரசம் பேசினர். இதைத் தொடர்ந்து, மறியல் போராட்டம் கைவிடப்பட்டது. இச் சம்பவம் காரணமாக, பல்லடம் சாலையில் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## அரசி ன் திட்டங்களை பயன்படுத்திக் கொள்ளுங்கள்

அரசின் திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விவசாயிகளை மாவட்ட ஆட்சியர் பொ.சங்கர் கேட்டுக் கொண்டார்.

காவேரிப்பாக்கம், நெமிலி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமங்களில் திருந்திய நெல் சாகுபடி செய்யப்பட்ட வயல், நெல் நடவுக் கருவியைக் கொண்டு நடவு செய்த வயல், விதைப் பண்ணை வயல் ஆகியவற்றை ஆட்சியர் சங்கர் பார்வையிட்டார். பின்னர் மேலபுலம்புதூரில் விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

அப்போது அவர் பேசியது:

நாட்டின் முதுகெலும்பாக விவசாயம் உள்ளது. விவசாயிகள் நலமுடன் இருக்க அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அத்திட்டங்கள் தகுதியுடைய அனைத்து விவசாயிகளும் பெற்று பயனடைய வேண்டும் என்றார்.

பின்னர் விவசாயிகளுக்கு விசைதெளிப்பான், விசைகளை களைஎடுக்கும் கருவிகள், தென்னங்கன்றுகள் உள்ளிட்டவற்றை ஆட்சியர் வழங்கினார்.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தமிழ்ச்செல்வன், உதவி இயக்குநர் விஸ்வநாதன், வேளாண் அலுவலர்கள் பிரபுதாஸ், தென்னரசு, ஒன்றியக் குழுத் தலைவர்கள் சரவணன் (காவேரிபாக்கம்), கோமதிமணிவண்ணன் (நெமிலி) உள்ளிட்டோர்உடனிருந்தனர்.

**தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்**

போளூரில் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு, தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத் தலைவர் சிவக்குமார் தலைமை வகித்தார். மாநில பொதுச்செயலாளர் ரவீந்திரன் சிறப்புரையாற்றினார்.

தமிழக அரசு கரும்பு டன்னுக்கு ரூ.3,500 வழங்க வேண்டும், வெட்டுக் கூலியை ஆலை நிர்வாகமே ஏற்க வேண்டும், எடை ரெக்கவரி மோசடியை தடுக்க வேண்டும், முத்தரப்புக் கூட்டத்தை உடனே கூட்ட வேண்டும், பதிவு செய்த கரும்பை அரவை செய்த பின்பே மற்ற கரும்புகளை அரவை செய்ய வேண்டும், வங்கிகளில் கரும்புக்கு கடன் வழங்க வேண்டும், 12 மாத கரும்பை வெட்டத் தவறினால் வங்கிக் கடனை ஆலை நிர்வாகமே ஏற்க வேண்டும், தீபாவளி, பொங்கல் பண்டிகைகளுக்கு ஒரு டன் கரும்புக்கு அரை கிலோ சர்க்கரையை ஆலை இலவசமாக வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

பொருளாளர் நடராஜன், மாவட்டச் செயலாளர் சிவக்குமார், மாநில துணைச் செயலாளர் ஜனார்த்தனன், வட்டச் செயலாளர் பாலமுருகன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### புதிய காற்றழுத்த தாழ்வு நிலை : இன்று மழை பெய்ய வாய்ப்பு

அந்தமான் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியிருப்பதால் கடலோர தமிழகம் மற்றும் புதுவையில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது: தெற்கு அந்தமான் கடலில் திங்கள்கிழமை காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. இந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையின் காரணமாக கடலோர தமிழகப் பகுதிகள் மற்றும் புதுவையில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

காற்றழுத்தத் தாழ்வு நிலை மேலும் வலுவடைந்தால் கன மழைக்கு வாய்ப்புள்ளது. இது மேற்காக தமிழகத்தை நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி கடலோர தமிழகத்தின் சில பகுதிகளில் லேசான மழை பெய்தது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழம் மற்றும் புதுவையில் ஓரிரு இடங்களில் புதன்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது. கடலோர பகுதிகளில் தரைக்காற்று வேகமாகவும் பலமாகவும் வீசும்.

சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில பகுதிகளில் லேசான மழை பெய்யும். தரைக்காற்று வேகமாக வீசும்.

### நெல் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் இழப்பீடு : கருணாநிதி வலியுறுத்தல்



தண்ணீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ள சம்பா நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு தமிழக அரசு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் இழப்பீடு வழங்கிட வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை:

சம்பா பயிர் கருகியதால் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பங்களுக்கு தி.மு.க. சார்பில் தலா ரூ.50 ஆயிரம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசை முந்திக் கொண்டு தி.மு.க. நிதியுதவி அளித்து விட்டது என்பதற்காக தமிழக அரசு அந்தக் குடும்பங்களுக்கு நிதியுதவி செய்ய முன்வரவில்லையா எனத் தெரியவில்லை.

இதுவரை 9 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதாக செய்திகள் வந்துள்ளன. ஆனால் 2 பேர் மட்டுமே தற்கொலை செய்து கொண்டுள்ளதாக முதல்வர் ஜெயலலிதா கூறினார் என்று அவரைச் சந்தித்த இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் கூறியுள்ளார். 2 பேர் மட்டும்தான் தற்கொலை செய்து கொண்டனர் என்பது உண்மையாக இருக்குமானால் விவசாயிகள் விபரீத முடிவினை எடுக்க வேண்டாம் என்று ஜெயலலிதா அறிக்கை வெளியிட்டது ஏன்?

பயிர் கருகிய காரணத்தால் தமிழகத்தில் 10 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட பிறகு, அரசின் மீது விவசாயிகள் பழி சுமத்துவார்கள் என்று எண்ணி, நாசமான பயிருக்காக வேளாண் காப்பீட்டுத் திட்டம் மற்றும் பேரிடர் நிவாரண நிதி மூலம் ஏக்கருக்கு ரூ.13 ஆயிரத்து 692 வழங்கப்படும் என்று ஜெயலலிதா கூறியுள்ளார்.

இந்த அறிவிப்பினை முன்னரே வெளியிட்டிருந்தால் 10 பேர் தற்கொலை செய்து கொண்டிருக்க மாட்டார்கள். காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 5 லட்சத்து 51 ஆயிரம் விவசாயிகள் மட்டுமே பதிவு செய்துள்ளனர். ஆகவே, பதிவு செய்யாத ஏழை விவசாயிகளுக்கும் இழப்பீடு வழங்க அரசு முன்வர வேண்டும்.

மேலும், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள இழப்பீடு மிகவும் குறைவாக உள்ளது. ஆகவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.25 ஆயிரம் இழப்பீடாக வழங்கிட வேண்டும். அதேபோல் விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ.10 ஆயிரம் நிதியுதவி அளித்திட வேண்டும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இதே கோரிக்கையை வைத்துள்ளது.

மீனவர்கள் கைது: நாகப்பட்டினம் அருகே நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 28 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவது என்பது தணியாத துன்பத் தொடர் கதையாகவே உள்ளது. இந்தப் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இனியாவது மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலவச வேட்டி, சேலை: கடந்த பொங்கல் பண்டிகையின்போது ஜனவரி மாதத்தில் வழங்கப்பட வேண்டிய இலவச வேட்டி, சேலைகள் கடந்த நவம்பர் மாதம்தான் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. இந்நிலையில் வேட்டி, சேலைகளை உற்பத்தி செய்ய நிதியில்லாமல் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் சிரமப்பட்டு வருகின்றன. இதனால் 2013-ம் ஆண்டு ஜனவரியில் வேட்டி, சேலை வழங்க முடியாத மோசமான நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பொய்யான குற்றச்சாட்டு: சொத்துக்விப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கு எதிராக சசிகலாவை நான் தூண்டி விட்டதாக பெங்களூர் நீதிமன்றத்தில் சசிகலா கூறியிருப்பது எவ்வித ஆதாரமும் இல்லாத பொய்யான குற்றச்சாட்டு.

அவகாசம் தர வேண்டும்: 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவர்கள் தங்கள் தொடர்பான விவரங்களை ஜனவரி 4-ம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் பதிவு செய்ய வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடுமையான மின்வெட்டு, போதுமான அளவில் கணினி மற்றும் இணையதள வசதிகள் இல்லாதது போன்றவற்றால் சுமார் 11 லட்சம் மாணவர்கள் ஜனவரி 4-ம் தேதிக்குள் தங்களைப் பற்றிய விவரங்களையெல்லாம் ஆன்லைனில் பதிவு செய்வது என்பது மிகவும் கடினம். ஆகவே, ஜனவரி 4-ம் தேதிக்குள் என்ற கால அவகாசத்தை அரசு மேலும் நீட்டிக்க வேண்டும் என்று கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

**தமிழக முதல்வருக்கு, தண்ணீரின் கடிதம்!**



அன்புள்ள தமிழக முதல்வருக்கு, நான் தண்ணீர் பேசுகிறேன்!

ஈரமிகு நெஞ்சம் கொண்ட உங்களின் கனிவான கவனத்திற்கு, எனது கருத்தை நானே எடுத்துரைக்கிறேன்.

தண்ணீர் வாக்கியங்களால், தமிழ்நாட்டின் தரைப்பரப்பெங்கும், வளங்களை எழுதிய நான், இன்று வறண்ட குரலில், வகையற்ற நிலையில், என் வறுமையைப் பேசுகிறேன்...

நீரின்றி அமையாது உலகு என்றார் வள்ளுவர். இப்போதோ உலகில் என் இருப்பே கேள்விக்குறியாகி வருகிறது.

ஆறுகளாய், ஏரிகளாய், குளங்களாய், வாய்க்கால்களாய் மனிதகுலத்தை வாழ்வித்தேன்.

எனது எல்லா வடிவங்களும், சிதைத்து சீரழிக்கப்பட்டு வருகின்றன.

ஓர் ஆட்சியாளருக்கும், நீராதாரத்துக்குமான உறவு மிகுந்த உயிர்த்தன்மை உடையது.

மன்னராட்சி தமிழ் மண்ணில் நடந்த காலத்திலேயே புலவர்கள் அரசனுக்குப் புகன்ற அறிவுரையில் நீராதாரத்திற்கு நிறைந்த முக்கியத்துவம் அளித்துள்ளனர்.

வெள்ளைக்குடி நாகனார் என்ற சங்கப்புலவர் சோழன் கிள்ளிவளவனுக்கு அறிவுரை கூற இயற்றிய ஒரு பாடலில், வில்லேர் உழவர்கள் அடைகிற வெற்றி, நிலத்தில் பயிர்விளைக்கும் நல்லேர் உழவர்களின் கையில்தான் உள்ளது என்கிறார்.

காட்சிக்கு எளியவனாக, கடமை தவறாதவனாக மன்னன் இருந்தால் மட்டும் போதாது, அரசாங்க ஊழியர்கள் அனைவரிடமும் இக்குணம் இருந்தாக வேண்டும்.

மக்களை வளமாக வைத்திருக்கும் ஆட்சி அழிவதை மக்கள் விரும்ப மாட்டார்கள். அந்த ஆட்சியை இழந்து வாழ்வதைவிட, தாம் அழிவதே சிறப்பு என்றெண்ணிக் களமிறங்குவார்கள். இத்தகைய மனஉறுதி கொண்ட மக்களை எத்தகைய படைவலிமையினாலும் வெல்ல முடியாது.

ஒரு நாட்டை வளம் கொழிக்க வைக்கும் அரசனைக் காணும் பிற நாட்டவரும், தம் நாட்டையும் இவனே ஆளவேண்டும் என ஆசை கொள்வர். தங்கள் நாட்டில் கிளர்ச்சி செய்து, ஆட்சியை இவனிடமே ஒப்படைப்பர்.

போர் தொடுக்காமலேயே பல தேசங்கள் அவன் குடையின் கீழ் தானாக வரும். உலகம் முழுவதையும் ஒரு குடை கீழ் ஆட்சி செய்ய ஆசைப்படும் அரசன், தன் நாட்டு உழவர்களை உளம் குளிர

வைத்திருக்க வேண்டும். உழவர்களுக்கான நன்மைகளை நாள்தோறும் சிந்தித்துச் செய்துவர வேண்டும் என்று பாடுகிறார்.

உழவர் நலன் காக்க, இன்னொரு புலவர் கூறும் உன்னதக் கருத்துகள் இன்று உயிர்ப்பிக்கப்பட வேண்டியவையாய் உள்ளன.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடும் புலவர் குடபுலவிய னார், உழவுத் தொழிலை உயர்த்திப் போற்ற விரும்பும் வேந்தன், நீர் நிலைகளைப் பெருக்க வேண்டும். அது அவனுக்கு நித்திய நன்மைகளையும், நிலையான புகழையும் தரும் என்று அறிவு றுத்துகிறார்.

நீரின்றி அமையா யாக்கைக் கெல்லாம்

உண்டி கொடுத்தோருயிர்கொடுத்தோரே

உண்டி முதற்றே உணவின் பிண்டம்

உணவெனப் படுவது நிலத்தொடு நீரே

நீரும் நிலனும் புணரீ யோரீண்டு

உடம்பும் உயிரும் படைத்திசினோரே

என்கிறார்.

நீரால் உண்டான உடல்களுக்கெல்லாம், உணவு கொடுப்பவரே உயிர் கொடுப்பவராவர். உடம்பு உணவையே அடிப்படைத் தேவையாகக் கொண்டது. உணவு (உண்டாக்கல்) என்பது நிலத்தோடு நீரைத் தேக்குவது ஆகும். நிலத்தில் நீரைத் தேக்கி வைப்பவர்கள் உடலையும் உயிரையும் ஒன்று சேர்த்தோர் ஆவர் என்கிறார்.

நாடாளுமன்றம், எதிர்க்கட்சிகள், நீதிமன்றங்கள், பத்திரிகைகள் என எதுவுமே இல்லாத, எதுவும் அரசனின் அதிகாரத்தில் தலையிட முடியாத மன்னராட்சி காலத்தில், மக்கள் நலனில் அக்கறை கொண்டு, புலவர்கள் நீர்நிலைகளுக்காக அரசனிடம் வாதாடி வலியுறுத்தியுள்ளார்கள்.

மக்களாட்சியில் நீர்நிலைகளின் நிலை என்ன?

ஆறுகள் அழிக்கப்படுகின்றன. ஆலைகளின் மாசுகள் அவற்றில் அளவின்றிக் கலக்கின்றன.

தோல் தொழிலும், சாயப்பட்டறையும் தொல் தொழிலான விவசாயத்தை அழிக்கின்றன. துள்ளி யோடும் நதிகளைத் தூக்கில் போட்டுத் துடிக்கவைத்துள்ளன.

மாதாவின் மார்பை மகவுகளே அறுப்பதுபோல்

ஆறுகளின் மணல் வளத்தை ஆறறிவினரே கொள்ளையடிக்கின்றனர்.

ஏரிகளைக் கொலை செய்து, "ஏரியா'க்கள் ஆக்கிவிட்டார்கள்.

குளமாய் இருந்த இடங்களைக் குப்பைகளால் தூர்த்து நிலமாய் நிமிர்த்திவிட்டார்கள். கண்மாய்க ளுக்குக் கருத்தடை செய்துவிட்டார்கள்.

வளங்களை எழுதுகிற வாய்க்கால்களோ, வராகங்கள் புரளுகிற சாக்கடைகளாகி விட்டன.

1970-க்குப் பின் அனைத்து நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளும் தமது திறனை இழந்துவிட்டன. நகர் மயமாக்கமும் அதீதமான நிலத்தடி நீர்ச்சுரண்டலும் பெரும் அபாயமாக வடிவெடுத்துள்ளன. நிலத் தடி நீர் கீழே சென்றதற்குச் செம்மண் வளத்தை வணிகப்படுத்தியதும் ஒரு காரணம் என்கிறது தமிழ்நாடு சுற்றுச்சூழல் கழகம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை.

நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சைத் தரணி என்றும், தமிழகத்தின் நெற்களஞ்சி யம் என்றும் போற்றப்பட்ட நாகை, திருவாரூர் மாவட்டங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம் மற்றும் காவிரியின் வரவைக் காலமெல்லாம் எதிர்நோக்கும் திருச்சி, பெரம்ப லூர் மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் ஆகிய பகுதிகள் இன்று வேளாண்மையின் சமாதிக ளாகி வருகின்றன.

காவிரிப் படுகையின் விவசாயம் இரண்டாயிரம் ஆண்டுகள் வரலாறு கொண்டது. கல்வி வளராத காலத்திலேயே, கல்லணையைக் கட்டிய தொலைநோக்கன் கரிகாலன் ஆண்ட பகுதி இது. இங்கோ பரிசாய் விளங்கிய வேளாண் நிலங்கள் இன்று தரிசாய் மாறி வருகின்றன. தரித்திரத்தின் சரித்திரத்திற்கு தமிழகம் இப்போது முன்னுரை எழுதிக் கொண்டிருக்கிறது.

காவிரிப் படுகையின் சராசரி மழைப் பொழிவு ஆண்டுக்கு 1,173 மில்லி மீட்டர். இதில் கோடை காலத்தில் 266 மில்லி மீட்டர் மழை பெய்கிறது. ஆனால் அப்போதைய தேவையோ 663 மில்லி மீட்டர் ஆக உள்ளது.

தென்மேற்குப் பருவக்காற்றால் கேரள, கர்நாடக மாநிலங்கள் அதிக மழைபெறும். தமிழகத்தின் தென்மாவட்டங்கள் கணிசமான மழைபெறும். காவிரிப்படுகை பெறும் மழை மிகக்குறைவே.

வடகிழக்குப் பருவக்காற்றின் போது காவிரிச் சமவெளி கனமழை பெறுகிறது. பெய்கிற மழை 529 மில்லி மீட்டர். ஆனால் தேவையோ 361 மில்லி மீட்டர் மட்டுமே.

தென்மேற்குப் பருவத்திலோ ஊரில் மழை இல்லாமல் போகும். வடகிழக்குப் பருவத்தில் மழையால் ஊரே இல்லாமல் போகும்.

கெடுப்பதூவும் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூவும் எல்லாம் மழை

அதிகமாய்ப் பெய்து கெடுப்பதும், அளவாகப் பெய்து வளத்தைக் கொடுப்பதும் மழைதான் என்ற குறளுக்கு காவிரிச் சமவெளிப்படுகையே கண்முன்பு உள்ள உதாரணம்.

1970-ஆம் ஆண்டு வெள்ளக் கட்டுப்பாடு வடிகால் சீர்திருத்தம் என்ற திட்டத்தைத் தமிழக அரசு தீட்டி மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியது. மத்திய அரசு இதை ஒப்பவில்லை. ஒப்புதலும் அளிக்கவில்லை. அதன்பிறகு காவிரிப்படுகையின் பாசன மேம்பாட்டுக்கென உருப்படியான திட்டங்கள் எதுவும் வரவில்லை.

குறுவைச் சாகுபடி கருகிப்போய், சம்பா சாகுபடியும் சாபம் வாங்கிய நிலையில் காவிரி விவசாயம் கண்கலங்கி நிற்கிறது. கர்நாடகமும், மத்திய அரசின் நாடகமும் சேர்ந்து தஞ்சை விவசாயியை வஞ்சித்து வருகின்றன. போதிய நீர் இல்லாமல் வேளாண் மக்கள் புழுவாய்த் துடிக்கின்றனர்.

ஆனால் 1996-ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் காவிரிப்படுகை விவசாயமே மூழ்கி அழுதது. காரைக்கால் என்ற சிறு பகுதியிலேயே வெள்ளச் சேதம் 26 கோடி ரூபாய் என்றும், வேதாரண்யம் பகுதியில் மானா கொண்டானாறு, வனவனாறு ஆகியவை உடைப்பெடுத்ததில் 20 ஆயிரம் ஏக்கர் நெற்பயிரும், 10 ஆயிரம் ஏக்கர் கடலை உள்ளிட்ட பயிர்கள் மூழ்கி அழிந்தன என்றும் தமிழ்நாட்டின் சுற்றுச்சூழல் ஆய்வறிக்கை 2005 தெரிவிக்கிறது.

வெள்ளப் பெருக்கால் விளைச்சல் அழிவது ஒருபுறம், நதிநீர் வராத காலத்தில் நிலத்தடி நீர் அதிகமாக எடுக்கப்படுவதால், கடல்நீர் உட்புகும் அபாயம் மறுபுறம்.

கொள்ளிடத்தில் 107 கிலோ மீட்டர் தூரத்திற்கு, மேலணைக்கும் கீழணைக்கும் இடையே 15 கிலோ மீட்டர் இடைவெளியில் தொடர்ச்சியாக தடுப்பணைகளைக் கட்டுவதன் மூலம் கடலில் வீணாகக் கலக்கும் நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தலாம். இத்தகைய தடுப்பணைகள் மூலம் 50 டி.எம்.சி. தண்ணீரைச் சேமிக்கலாம்.

ஜூன் முதல் டிசம்பர் வரை பெய்யும் 850 மில்லி மீட்டர் மழை நீரையும் இவ்வணைகள் மூலம் சேமிக்கலாம் என பொதுப் பணித்துறையின் மேனாள் கண்காணிப்புப் பொறியாளர் என்.நடராஜன் கொடுத்த திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

மதுரை, கரூர், திண்டுக்கல், தேனி, சிவகங்கை மாவட்டங்களை உள்ளடக்கிய மத்திய மண்டலத்தின் விவசாயமும் கத்திமேல் நடக்கிறது.

பல்லாயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்த தியாகத்தின் மீது கட்டப்பட்ட வைகை அணையின் நீர்ப்பிடிப்புத் திறனும், கொள்ளளவும் பெருமளவு குறைந்து விட்டதாக நிபுணர்கள் அறிக்கை கவலை தெரிவிக்கிறது. காரணம், மேற்குத் தொடர்ச்சி மலையின் இயற்கைச் சூழலை, மனிதன் கெடுத்ததால் மழை வெள்ளப் பெருக்கு மண்ணை வாரிக்கொண்டு வருகிறது. இதனால் அணையின் கொள்ளளவு குறைகிறது.

வைகை ஆற்றுநீர் கண்மாய்களைத் நிறைத்து மீண்டும் ஆற்றுக்கே திரும்பும் வகையில் அருமையான கட்டமைப்பைக் கொண்டது.

கண்மாய்கள் காலங்காலமாய் கண்டுகொள்ளப் படாததால் நீரை சுவாசிக்கும் கண்மாயின் பாதைகள் நெருக்கடிக்கு உள்ளாகிவிட்டன.

சன் பேப்பர் மில்ஸின் கழிவு தாமிரபரணியைத் தாக்குகிறது.

சதர்ன் இந்தியா விஸ்கோஸ் நிறுவனத்தின் கழிவு பவானி ஆற்றைப் பாழாக்கியது. (விவசாயிகளின் போராட்டத்தால் விஸ்கோஸ் 2001-இல் மூடப்பட்டது).

சாயப்பட்டறைகள் நொய்யல் ஆற்றைச் சாகடித்து வருகின்றன.

ஆற்று நீரை முறையாகத் தேக்கவும், மாசில்லாமல் காக்கவும் முயற்சிகள் இல்லை. ஏரி நின்ற இடங்களில் எல்லாம் கட்டடங்கள் ஏறி நிற்கின்றன. அரசாங்கக் கட்டடங்களும் இதில் அடக்கம்.

குளங்கள், கண்மாய்கள், வாய்க்கால்களின் எண்ணிக்கை அதிவேகமாகக் குறைந்து வருகின்றன.

கடந்த 25 ஆண்டுகளில் நீர்நிலைகளின் எண்ணிக்கைக் குறைந்திருக்கிறதே அன்றி கூடவில்லை.

"ரியல் எஸ்டேட்' கொடுந்தொழிலால், வேளாண் பூமிகள் திட்டமிட்டு தரிசு நிலங்களாக்கப் படுகின்றன.

விளை நிலங்கள் எல்லாம் விலைநிலங்களாகி விட்டால், சோற்றுக்கு எங்கே போவார்கள் என்று தெரியவில்லை.

அன்னியச் செலாவணி மோகத்தில், இறால் பண்ணைகளை அமைத்து, விளைநிலங்கள் விஷமாக்கப்பட்ட கொடுமையை விளக்கப் பக்கங்கள் போதாது.

மழைநீர் சேகரிப்பு என்ற மகத்தான திட்டத்தைத் தந்த முதல்வரே, காவிரிக்காக கர்நாடகத்தோடு போராடி வருகிறீர்கள். கர்நாடகத்திலும், கேரளத்திலும் பாஜக, காங்கிரஸ் உள்ளிட்ட எதிரெதிர் துருவங்கள் ஒன்றுசேர்ந்து தமிழகத்தின் உரிமையை மறுப்பது குறித்து கருத்துக் கூறும் அளவுக்கு எனக்கு அரசியல் தெரியாது.

என் மீது எதையும் எழுத முடியாது என்றுதான் நினைத்திருந்தேன். ஆனால் என் மீது தான் பிரிவினை அரசியலை எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

பிரியாத என்னை வைத்து மக்களைப் பிரிப்பது அரசியல் சாணக்கியர்களுக்கு தண்ணீர் பட்ட பாடு...

இதயத்தில் ஈரமும், இயல்பில் வீரமும் உங்களுக்கு உண்டு.

தமிழகத்தின் நீர்நிலைகள் மீதும், நீர்வளத்தின் மீதும் கவனம் செலுத்துங்கள். நீரை விற்பனைப் பொருளாக்கும் அபாயத்தைப் போக்குங்கள்.

நீரின்றி அமையாது உலகு என்ற நிலைமாறி, நீரின்றி அமையாது உலக அரசியல் என்னும் நிலை வந்துவிட்டது.

நீங்கள் என்னைப் பாதுகாத்தால் நானும் உங்களைப் பாதுகாப்பேன்.

வாக்குரிமை இல்லாத என்னை,

வழக்கமான அரசியல்வாதி போல,

அலட்சியப்படுத்தி விடாதீர்கள்

வாக்குரிமையினும் சிறந்தது

வாழ்வுரிமையல்லவா?

இப்படிக்கு

தங்களின் நடவடிக்கையைத் தாகமுடன் எதிர்பார்க்கும் தண்ணீர்.

25th dec 2012 P.M

**மரம் வளர்ப்பு தொழில்நுட்ப பயிற்சி**

இலுப்பூர் அருகே உள்ள கிளிக்குடியில் தமிழ்நாடு அரசு வனத்துறை மற்றும் தாய்தமிழ் பள்ளி கூட்டமைப்பு இணைந்து நடத்திய மரம் வளர்ப்பு பற்றிய தொழில்நுட்ப பயிற்சி பள்ளி வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு புதுக்கோட்டை ஜுனியர் சேம்பர் சங்கமத் தலைவர் குமரவடிவேல் தலைமை வகித்தார். பயிற்சியில் மரம் வளர்ப்பு, பயன்பாடு, உயிர் உரங்கள் தயாரிப்பு உள்ளிட்டவைகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. தாய் தமிழ் பள்ளிகளின் கூட்டமைப்புத் தலைவர் பாபுராஜேந்திரன், வடகாடு தாய்தமிழ் தொடக்கப்பள்ளி தாளாளர் ராசா ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் புதுக்கோட்டை வனச்சரக அலுவலர் ராஜமாரியப்பன், தொழில்நுட்ப உதவியாளர் மருதமுத்து ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சியளித்தனர். கிளிக்குடி தாய்தமிழ் தொடக்கப் பள்ளி தாளாளர் சிங்காரபாண்டியன் நன்றி கூறினார். விழாவில் முன்னாள் கால்நடை ஆய்வாளர் முத்தையா, ரெங்கசாமி அறக்கட்டளை நிறுவனர் சண்முகம் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**கரும்புக்கு மானிய விலையில் உரம் வழங்க காலதாமதம்**

தேனி மாவட்டத்தில் விவசாயத் துறை மற்றும் கரும்பு ஆலை நிர்வாகம் மூலம் கரும்புக்கு உரிய காலத்தில் மானிய விலையில் உரம் வழங்காததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக புகார் எழுந்துள்ளது.

மாவட்டத்தில் தற்போது 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கரும்பு விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் அமைப்பதற்கும், உரம் வாங்குவதற்கும் அரசு சார்பில் மானியம் அளிக்கப்பட்டு வருகிறது. கரும்பு ஆலையில் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு ஆலை நிர்வாகம் மூலமும், மற்ற விவசாயிகளுக்கு விவசாயத் துறை மூலமும் மானியம் வழங்கப்படும்.

கரும்பு நடவு செய்து 8 மாதங்களுக்கு மேல் ஆகியும் சின்னமனூர், பெரியகுளம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் ஆலை நிர்வாகம் மற்றும் விவசாயத் துறை சார்பில் மானிய விலையில் உரம் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. 4 மாத பருவத்தில் உரமிட வேண்டிய நிலையில், 8 மாதங்களுக்கு மேல் ஆகியும் உரம் வழங்கப்படாததால், பல இடங்களில் கரும்பு வளர்ச்சி குன்றி, தட்டைகள் பூ பூத்து மகசூலின்றி உள்ளன.

இது குறித்து மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் பாண்டியன் கூறியது: கரும்பு ஆலை நிர்வாகம் மற்றும் விவசாயத் துறை சார்பில் கரும்பு விவசாயிகளுக்கு முறையான வழிகாட்டுதல் இல்லை. மானிய விலையில் உரம் வழங்க காலதாமதம் ஏற்பட்டுள்ளதால் ஒரு ஏக்கருக்கு 40 டன்னுக்கும் குறைவாக கரும்பு மகசூல் கிடைக்கும் நிலை உள்ளது. விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்படும். மாவட்டத்தில் 20 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு, 6 லட்சம் டன் உற்பத்தி ஈட்டி வந்த கரும்பு விவசாயம் நலிவடைந்து வருகிறது. போதிய தண்ணீர் வசதி உள்ள இடங்களில் விவசாயிகள் மாற்றுப் பயிராக திசு வாழை சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர் என்றார்.

## கரும்பு சாகுபடி கருத்தரங்கம்

சர்க்கரை ஆலை குழுமத்தின் தலைவர் ராஜ்ஸ்ரீபதி கருத்தரங்கிற்கு தலைமை வகித்தார். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் கே.ராமசாமி முன்னிலை வகித்தார். சர்க்கரை ஆலையின் முதுநிலை துணைத் தலைவர் எம்.கிருஷ்ணன் வரவேற்றார்.

சர்க்கரை ஆலையின் இயக்குனர்ஆர்.வரதராஜன், தலைவர் ஏ.சத்தியமூர்த்தி, அரசு

வேளாண்மைத்துறை அலுவலர்கள் மற்றும் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த கரும்பு சாகுபடி விவசாயிகள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். கரும்பு சாகுபடியில் நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி, அதிக மகசூல் பெறுவதற்கான வழிவகைகள் குறித்து விளக்கப்பட்டது. மேலும் சாதனை புரிந்த விவசாயிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஜி.சத்தியமூர்த்தி நன்றி கூறினார்.

## கரும்பு டன்னுக்கு ரூ.3,500 கோரி ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை கிளை சார்பில் கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம் வந்தவாசி கரும்பு கோட்ட அலுவலகம் எதிரில் திங்கள்கிழமை நடைபெற்றது.

கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3,500 விலை நிர்ணயம் செய்ய வேண்டும், கரும்பு வெட்டுக்கூலியை ஆலையே ஏற்று வழங்க வேண்டும், ஆலைக்குச் சொந்தமாக கரும்பு வெட்டும் இயந்திரங்களை வாங்க வேண்டும், கரும்பு விலை கட்டுப்பாட்டுச் சட்டம்

1966-ஐ ரத்து செய்யக் கூடாது, செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எத்தனால் உற்பத்திப் பிரிவு தொடங்குவதற்கு பாரபட்சமாக வசூலிக்கப்பட்ட முன்வைப்பு பங்குத் தொகையை உடனடியாக திரும்ப வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

சங்கத் தலைவர் பெ.அரிதாசு தலைமை வகித்தார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட துணைத்தலைவர்கள் சோலை.பழனி, கி.பால்ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## நெல் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் இழப்பீடு : கருணாநிதி வலியுறுத்தல்

தண்ணீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ள சம்பா நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு தமிழக அரசு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வழங்கிட வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பங்களுக்கு தி.மு.க. சார்பில் தலா ரூ.50 ஆயிரம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசை முந்திக் கொண்டு தி.மு.க. நிதியுதவி அளித்து விட்டது என்பதற்காக அந்தக் குடும்பங்களுக்கு தமிழக அரசு சார்பில் நிதியுதவி செய்ய முன்வரவில்லையா எனத் தெரியவில்லை.

இதுவரை 9 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதாக செய்திகள் வந்துள்ளன. ஆனால் 2 பேர் மட்டுமே தற்கொலை செய்து கொண்டுள்ளதாக முதல்வர் ஜெயலலிதா கூறினார் என்று அவரைச் சந்தித்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் கூறியுள்ளார். 2 பேர் மட்டும்தான் தற்கொலை செய்து கொண்டனர் என்பது உண்மையாக இருக்குமானால் விவசாயிகள் விபரீத முடிவினை எடுக்க வேண்டாம் என்று ஜெயலலிதா அறிக்கை வெளியிட்டது ஏன்?

பயிர் கருகிய காரணத்தால் தமிழகத்தில் 10 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட பிறகு, அரசின் மீது விவசாயிகள் பழி சுமத்துவார்கள் என்று எண்ணி, நாசமான பயிருக்காக வேளாண் காப்பீட்டுத் திட்டம் மற்றும் பேரிடர் நிவாரண நிதி மூலம் ஏக்கருக்கு ரூ.13 ஆயிரத்து 692 வழங்கப்படும் என்று ஜெயலலிதா கூறியுள்ளார். காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 5 லட்சத்து 51

ஆயிரம் விவசாயிகள் மட்டுமே பதிவு செய்துள்ளனர். ஆகவே, பதிவு செய்யாத ஏழை விவசாயிகளுக்கும் இழப்பீடு வழங்க அரசு முன்வர வேண்டும்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.25 ஆயிரம் இழப்பீடாக வழங்கிட வேண்டும். அதேபோல் விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ.10 ஆயிரம் நிதியுதவி அளித்திட வேண்டும்.

சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கு எதிராக சசிகலாவை நான் தூண்டி விட்டதாக பெங்களூர் நீதிமன்றத்தில் சசிகலா கூறியிருப்பது எவ்வித ஆதாரமும் இல்லாத பொய்யான குற்றச்சாட்டு. 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவர்கள் தங்கள் தொடர்பான விவரங்களை ஜனவரி 4-ம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் பதிவு செய்ய வேண்டும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடுமையான மின்வெட்டு, போதுமான அளவில் கணினி மற்றும் இணையதள வசதிகள் இல்லாதது போன்றவற்றால் சுமார் 11 லட்சம் மாணவர்கள் ஜனவரி 4-ம் தேதிக்குள் தங்களைப் பற்றிய விவரங்களையெல்லாம் ஆன்லைனில் பதிவு செய்வது என்பது மிகவும் கடினம். அதேபோல் 12-ம் வகுப்பு மாணவர்களின் புகைப்படங்களை பதிவேற்றம் செய்வதிலும் சிரமங்கள் இருப்பதாக மாணவர்கள் கூறுகின்றனர். ஆகவே, ஜனவரி 4-ம் தேதிக்குள் என்ற கால அவகாசத்தை அரசு மேலும் நீட்டிக்க வேண்டும்

-இவ்வாறு கருணாநிதி கூறியுள்ளார்

## ஆற்றாது அழுத கண்ணீர் !

விவசாயிகள் தற்கொலை'யில் முன்னணியில் உள்ளவை மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரம், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் ஆகிய ஐந்து மாநிலங்கள்தான். இந்த மாநிலங்களில் அதிகமான எண்ணிக்கையில் விவசாயிகள் தற்கொலை செய்துகொண்ட காலகட்டத்தில்கூட, தமிழகத்தில் விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளும் சம்பவங்கள் குறைவாகவே இருந்தன.

அண்மைக்காலமாக தமிழகத்தில் விவசாயிகள் தற்கொலைச் சம்பவங்கள் தொடங்கியுள்ளன. பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின்றன. "சம்பா பொய்த்ததால் தற்கொலை' என்று செய்திகள் குறிப்பிடுகின்றன. திருவாரூர், நாகை, புதுக்கோட்டை மாவட்டங்களில் வாரத்திற்கு இரண்டு செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

காவிரி நீர் கிடைக்காத காரணத்தால் தமிழ்நாட்டில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதும், கடைமடைப் பகுதியில் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் வாடுகின்றன என்பதும் உண்மை. இருப்பினும், தமிழக அரசு டெல்டா விவசாயத்துக்காக ரூ.70 கோடியில் திட்டம் அறிவித்து,

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று அறிவித்த பிறகும், "வேளாண்மை பொய்த்ததால் விவசாயி தற்கொலை' என்ற செய்திகள் சற்று கூடுதலாகியுள்ளன.

தற்கொலை செய்துகொள்ளும் விவசாயி, ""விவசாயம் பொய்த்ததால்தான் தற்கொலை செய்துகொள்கிறேன்'' என்று எழுதிவைத்துவிட்டுத்தான் சாக வேண்டும் என்று சொன்னால் அதைவிடக் கேவலம், இரக்கமற்ற தன்மை வேறு எதுவுமே இருக்க முடியாது. இருந்தாலும், ஒரு விவசாயி தற்கொலை செய்துகொண்டபோது அவரது குடும்பத்தின் சூழல், பயிரிட்ட பரப்பு, தற்போதைய பாதிப்பு, வாங்கிய கடன், வருவாய்க்கான வேறு ஆதாரங்கள், அன்றைய தேதியில் அவரது வங்கிக் கணக்கின் இருப்பு அனைத்தையும் கருத்தில்கொண்டுதான், ஒரு தற்கொலையின் பின்னணியை வகைப்படுத்த முடியும்.

இந்தத் தற்கொலைகளின் காரணம் வேளாண்கடன்தான் என்பதை உறுதிப்படுத்த வேண்டியவர்கள் அந்தந்தப் பகுதியில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்களும், வேளாண்மை அலுவலர்களும்தான். அரசியல்வாதிகளோ அல்லது அரசியல் சார்புடைய விவசாய சங்கத் தலைவர்களோ அல்ல.

இவை, விவசாயம் பொய்த்ததால் நேரிட்ட தற்கொலைதான் என்பதை முறையாகப் பதிவு செய்து, அதுகுறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி அறிக்கை அளிக்கக் கோருவதும், விரைந்து இழப்பீடு கிடைக்கச் செய்வதுமே தற்போது எதிர்க்கட்சிகளும் விவசாய அமைப்புகளும் செய்ய வேண்டிய கடமை. வெறுமனே அறிக்கைவிட்டு ஒதுங்கிக்கொள்வது அல்ல.

"நெற்பயிர் காய்ந்ததால் மாடுகளை மேயவிட்டார்' என்று பத்திரிகைகளுக்குச் செய்தி தருவது பரபரப்பைத் தரலாம். ஆனால், அந்த விவசாயி அந்த இடத்தில் சம்பா சாகுபடிதான் செய்திருக்கிறார் என்பதை நிரூபிக்க அது உதவாது. இதற்கு தொடர்புடைய அதிகாரிகளை அங்கே நேரில் வந்து ஆய்வு நடத்த வைப்பதுதான் விவசாய அமைப்புகளின் கடமையாக இருக்க முடியும்.

சம்பா சாகுபடி பொய்த்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று தமிழக அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. பயிர்க் காப்பீடு திட்டத்தின் சந்தாவை அரசே செலுத்தும் என்றும், இதனால் ஒரு ஏக்கருக்கு ரூ.8,692 இழப்பீடும், அத்துடன் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5,000-ம் சேர்த்து மொத்தம் ரூ.13,692 விவசாயிக்கு இழப்பீடாகக் கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இழப்பீடு குறைவு என்பது வேண்டுமானால் நியாயமான வாதமாக இருக்கலாம். ஆனால், அதைவிட முக்கியம் இந்த இழப்பீடு உரிய விவசாயிக்குப் போய்ச் சேர வேண்டும்

என்பதாகத்தான் இருக்க முடியும். யார் உண்மையான விவசாயி, யார் குத்தகைக்குப் பயிரிட்டு நட்டப்பட்டவர் என்பதை விசாரிக்காமல் "சிட்டா' பதிவின்படி இழப்பீடு கொடுத்தால், யாரோ சிலர் பயன் அடைவார்கள். உண்மையான விவசாயி பயன்பெற மாட்டார். உண்மையான விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைக்கச் செய்வதில்தான் இன்றைய விவசாய அமைப்புகளின் பங்கு மிக முக்கியமானது.

விவசாயிகளின் தற்கொலைகள் அச்சம் தரும் எண்ணிக்கையைத் தொடவில்லை என்று தமிழக அரசு மெத்தனமாக இருப்பது கூடாது. டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ள பரப்பு, அவற்றில் தண்ணீர் கிடைக்காமல் வேளாண்மை பாதித்த பகுதி, நெற்பயிர்கள் வாடிய பரப்பு அனைத்தையும் இப்போதே கணக்கிடவும், அந்தப் பயிரைச் சாகுபடி செய்த உண்மையான விவசாயி யார் என்பதையும், அவர் யாரிடம் கடனுதவி பெற்றார் என்ற விவரங்களையும் சேகரிக்க வேண்டியது அவசியம். இத்தகைய நடவடிக்கைகள், அரசின் இழப்பீடு கிடைக்கும் என்ற நம்பிக்கையை விவசாயிகளிடம் ஏற்படுத்தும். அவர்கள் தற்கொலை செய்துகொள்ளும் மனநிலைக்கு ஆளாக மாட்டார்கள்.

தமிழ்நாட்டில் "விவசாயிகள் தற்கொலை'யே இல்லை என்று சொல்வதைக் காட்டிலும், விவசாயிகளின் பயிர் பாதிப்புக்கு இழப்பீடு கிடைக்கும்; அச்சம் தேவையில்லை என்று உறுதிசெய்வதுதான் தமிழக அரசின் முதல் கடமை!

எல்லா விவசாயிகளும் வங்கியில்தான் கடன் பெற்றிருப்பார்கள் என்று சொல்ல முடியாது. வங்கியில் கடன்பெற்ற விவசாயிகளை வங்கி அதிகாரிகள் மிரட்ட மாட்டார்கள். உண்மையில் மிகவும் பாதிக்கப்படும் விவசாயிகள் தனியார் கொள்முதல் வியாபாரிகளிடமும், உர வியாபாரிகளிடமும் சிக்கியவர்கள்தான். அரசு தரக்கூடிய இழப்பீட்டுத் தொகையை விவசாயிகள் இந்த வியாபாரிகளிடம் கொட்டியழும் துர்பாக்கிய நிலைமை தற்கொலையைவிட துயரமானது. அதை எப்படி எதிர்கொள்ளப் போகிறோம்?

காவிரி நீரால் தமிழகம் எந்த அளவுக்குப் பாதித்திருக்கிறது என்பதைத்தான் இந்தத் தற்கொலைகள் வெளிச்சம் போட்டுகாட்டுகின்றன. ஒவ்வொரு விவசாயியின் மரணத்திற்கும், கர்நாடக அரசியல்வாதிகளும், வாளாவிருக்கும் மத்திய அரசும்தான் பதில் சொல்ல வேண்டும். இத்தனைக்குப் பிறகும் தமிழகத்தின் நியாயமான கோரிக்கை புறக்கணிக்கப்பட்டு, விவசாயம் பாதிக்கப்படுமானால், விவசாயிகளின் தற்கொலை தொடருமானால், அதன் விளைவுகள் தேசத்தின் ஒற்றுமையையேகூட வருங்காலத்தில் பாதிக்கக்கூடும். இதை ஏன் மத்திய அரசு உணர மறுக்கிறது என்பதுதான் தெரியவில்லை.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

26.12.2012 A.M

## பொய்த்தது மழை : தளரவில்லை மனம்நிலக்கடலை செடியை காக்கும் விவசாயி

குஜிலியம்பாறை:திண்டுக்கல், ஆர்.வெள்ளோடு ஊராட்சியில், மழை இல்லாததால், நிலக்கடலை விவசாயத்திற்கு, குழாய் மூலம் தண்ணீர் தெளித்து வருகின்றனர்.குஜிலியம்பாறை ஒன்றிய பகுதியில் நடப்பு ஆண்டில் போதிய மழை இல்லை. விவசாய கிணறுகளுக்கு நீர் வரத்து இல்லை. இங்குள்ள குளங்கள் வறண்டு கிடக்கின்றன. இதனால் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் நிலையில், விவசாயம் பொய்த்துப்போய் உள்ளது.காப்பாற்ற முயற்சி: வெள்ளோடு நொச்சிப்பட்டியில், நிலக்கடலை விவசாயத்திற்கு, போதிய தண்ணீர் இல்லாததால், பைப் மூலம் தண்ணீர் பீச்சியடித்து, செடிகளை காப்பாற்றி வருகின்றனர்.

இது பார்ப்பவர்களையும் கவர்ந்துள்ளது. விவசாயி முத்துச்சாமி கூறுகையில்,""மழை பெய்யும் என்ற நம்பிக்கையில், மூன்று ஏக்கர் நிலக்கடலை பயிரிட்டோம். போதிய மழை இல்லாததால், தண்ணீர் பற்றாக்குறை எற்பட்டு, பயிர்கள் வாடும் நிலை ஏற்பட்டது. மின்சப்ளை உள்ள நேரத்தில் மட்டும், பைப் மூலம் தண்ணீரை பீய்ச்சி அடித்து செடிகளை காப்பாற்றுகிறோம். வேளாண்மை துறையினர் சொட்டு நீர் பாசன வசதி செய்து தர வேண்டும்," என்றார்.

## தேனீ வளர்ப்பு பயிற்சி ஆதிவாசி மக்கள் பயன்

கோத்தகிரி : கோத்தகிரியில் ஆதிவாசி மக்களுக்கான தேனீ வளர்ப்பு பயிற்சி முகாம் நடந்தது. கோத்தகிரி "ஐலெண்ட் டிரஸ்ட்' மற்றும் பருவ நிலை மாற்ற வாழ்வாதார திட்ட அமைப்பு ஆகியவை இணைந்து நடத்திய முகாமுக்கு, திட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜு தலைமை வகித்தார். களப்பணியாளர் தர்மன் முன்னிலை வகித்தார்.

கோத்தகிரி கீ ஸ்டோன் அலுவலக தேனீ வளர்ப்பு பயிற்சியாளர்கள் சந்திரன், கிருஷ்ணன் ஆகியோர் ஆதிவாசி மக்களுக்கு பயிற்சி அளித்தனர். இதில், தேனீயின் வாழ்நாள், தேனியை தாக்கும் நோய்கள், தேனீ வளர்ப்பதால் கிடைக்கும் நன்மைகள், தேன் எடுக்கும் முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும், தேன்பெட்டி, தேனை அடையில் இருந்து பிரித்தெடுக்கும் இயந்திரம்,

தேனெடுக்கும்போது பயன்படுத்தும் சல்லடை துணி ஆகியவற்றை கொண்டு, நேரடி செயல் விளக்கமும் அளிக்கப்பட்டது. இப்பயிற்சி முகாமில், 12 ஆதிவாசி கிராமங்களில் இருந்து இருளர் மற்றும் குரும்பரின ஆதிவாசி மக்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், நிதி உதவி, தேன் விற்பனை, பெட்டிக்கடை வைப்பதற்கான உதவிகளை பெறும் வகையில், விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முடிவில், ஆதிவாசிகளுக்கு இலவசமாக தேன் பெட்டிகள் வழங்கப்பட்டன.

## கப்பியாம்புலியூரில் கரும்பு பயிர் சேதம்

விழுப்புரம்:விழுப்புரம் அருகே தீ விபத்தில் இரண்டரை ஏக்கர் கரும்பு பயிர் சேதமடைந்தது.விழுப்புரம் அருகே உள்ள கப்பியாம்புலியூரைச் சேர்ந்தவர் ராமகிருஷ்ணன். அதே பகுதியில் உள்ள இவரது நிலத்தில் கரும்பு பயிரிட்டிருந்தார். நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு இவரது கரும்புத் தோட்டத்தில் திடீரென தீப்பிடித்து எரிந்தது.மின் கசிவு காரணமாக ஏற்பட்ட இந்த விபத்தில், இரண்டரை ஏக்கர் அளவிலான கரும்பு பயிர்கள் முற்றிலும் எரிந்து சேதமடைந்தது.தகவல் அறிந்த விழுப்புரம் தீயணைப்பு நிலைய அலுவலர் கிருஷ்ணன் மற்றும் குழுவினர் விரைந்து சென்று, தீ பரவாமல் அணைத்தனர்.

## ஆத்தூரில் பருத்தி ஏலம்ரூ .12 லட்சம் வர்த்தகம்

ஆத்தூர்: ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்தில், 12 லட்சம் ரூபாய் வர்த்தகம் நடந்தது.ஆத்தூர், புதுப்பேட்டை பகுதியில், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் உள்ளது. நேற்று நடந்த பருத்தி ஏலத்துக்கு, ஆத்தூர், தலைவாசல், வீரகனூர், சின்னசேலம், கள்ளக்குறிச்சி பகுதியில் இருந்து, 200க்கும் மேற்பட்ட விவசாயிகள், 600 பருத்தி மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர்.அதன்படி, பி.டி., ரகம் பருத்தி குவிண்டால் அதிகபட்சம், 4,456 ரூபாயும், குறைந்தபட்சம், 4,069 ரூபாயும், டி.சி.ஹெச்., குவிண்டால் அதிகபட்சம், 4,969 ரூபாயும், குறைந்தபட்சம், 4,356 ரூபாய் என, விற்பனை செய்யப்பட்டது.இதில், 600 பருத்தி மூட்டைகள், 12 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. பருத்தி விலை கணிசமாக உயர்ந்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## வறட்சி நீர் ஆதாரமாக விளங்கும் தூசூர் ஏரியில் ... பருவ மழை கைவிட்டதால் பரிதாபம்

நாமக்கல்: மழை பொழிவின்மையால், ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்களுக்கு பாசன வசதி அளித்த, தூசூர் ஏரி வறண்டு வானம் பார்த்த பூமியாகி விட்டது. தவிர, ஏரிப் பாசனத்தை நம்பியிருந்த விவசாயிகளை, பருவ மழையும் கைவிட்டதால் கவலையடைந்துள்ளனர்.

நாமக்கல் அருகே, தூசூரில், ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ஏரி அமைந்துள்ளது. இது நாமக்கல் மாவட்டத்தில் மிகப் பெரிய ஏரி. கடல் போல் பரந்து விரிந்த ஏரிக்கு, கொல்லிமலை, அருகே உள்ள பழையபாளையம் ஏரி மற்றும் வாய்க்கால் ஆகியவை நீர் பிடிப்பு பகுதிகளாகும். கொல்லிமலையில் மழைப்பொழிவு ஏற்படும் போது, அங்கிருந்த வரும் வெள்ளம் முதலில் பழையபாளையம் ஏரியை வந்தடைகிறது. அந்த ஏரி நிரம்பியபின், அதிலிருந்து வெளியேறும் உபரிநீர், தூசூர் ஏரியை வந்தடையும். தூசூர் ஏரி மூலம் தூசூர், ரெட்டிப்பட்டி மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களில் உள்ள, ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலம் பாசன வசதி பெற்று வருகிறது. தவிர, ஏரி முழுவதும் நிரம்பி இருக்கும் போது, மீன்பிடி தொழிலிலும் அப்பகுதியினர் ஈடுபடுவர்.

இந்நிலையில், பருவமழை பொய்த்தது போன்ற பல்வேறு காரணங்களால், தூசூர் ஏரி வறண்டு, வானம் பார்த்த பூமியாக மாறி விட்டது. ஏரியில், ஆங்காங்கே குட்டை போல் மட்டும் தண்ணீர் தேங்கியுள்ளது. இந்நிலையில், ஏரிப் பாசனத்தை நம்பி விளைநிலங்களை உழவு செய்த விவசாயிகளை, இந்தாண்டு பருவ மழையும் கைவிட்டு விட்டது. அதனால், உழவு செய்யப்பட்ட விளைநிலங்கள் அனைத்தும் தரிசாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து, தூசூரை சேர்ந்த விவசாயிகள் சிலர் கூறியதாவது:

தூசூர் ஏரிப்பாசனத்தை நம்பி, சுற்றுவட்டார கிராமங்களில், ஆயிரக்கணக்கான விளைநிலங்கள் உள்ளன. ஏரியில் நீர் நிரம்பி இருக்கும் போது, சுற்றுவட்டார கிணறுகளிலும் நீர் மட்டம் உயர்ந்து காணப்படும். அதனால், பாசன விவசாயிகள் மட்டுமின்றி மற்ற பகுதி விவசாயிகளும் பயன்பெற்று வந்தனர்.

இந்தாண்டு எதிர்பார்த்த அளவு மழை பொழிவு இல்லை. அதனால், விளை நிலங்களின் நீர் ஆதாரமான தூசூர் ஏரி, வறண்டு மேய்ச்சல் நிலமாக மாறியுள்ளது. ஏரியை நம்பியுள்ள விளைநிலங்களிலும் பயிர் செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது. பருவமழை கைகொடுக்கும் என, இப்பகுதி விவசாயிகள் நிலங்களை உழவு செய்துள்ளனர்.

பருவ மழையும் ஏமாற்றியதால், உழவு செய்யப்பட்ட அனைத்து விளைநிலங்களும் வானம் பார்த்த பூமியாகி விட்டது, என்றனர்.

## விவசாய நிலங்களில் புகும் யானைகளால் பயிர்கள் நாசம்

திருவண்ணாமலை: கண்ணமங்கலம் அருகே காட்டு யானைகள் விவசாய நிலங்களில் புகுந்து பயிர்களை நாசம் செய்ததால், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

கண்ணமங்கலம் அடுத்த ஜவ்வாது மலைப்பகுதியில் உள்ள ஆலங்காயம் பகுதியில் கடந்த சில நாட்களாக காட்டு யானைகள் அப்பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் உள்ள பயிர்களை நாசம் செய்து வருகின்றன,

நேற்று முன்தினம் இரவு வெள்ளாண்டப்பன் கோயில், பூசனைவலசை, நீப்ளாம்பட்டு, மற்றும் மலைக்கோயில் பகுதியில் முகாமிட்டன. அங்கு சம்பத்,52, என்பவரின் கூரை வீட்டை இடித்து தள்ளி, உள்ளே இருந்த நிலக்கடலை மற்றும் அரிசி மூட்டைகளை நாசம் செய்தன. அருகில் இருந்த மஞ்சள் பயிர்களை நாசம் செய்தன.

மேலும், குமார் என்பவரின் வாழைத்தோட்டம், சேட்டு என்பவரின் நெற் பயிர்கள் போன்றவற்றையும் சேதப்படுத்தின. இதையடுத்து கிராம மக்கள் திரண்டு யானைக்கூட்டத்தை விரட்டினர்.

வனக்காப்பாளர் நடேசன் சம்பவ இடத்தை பார்வையிட்டு இழப்பு குறித்து கணக்கெடுப்பு நடத்தினார். யானைகள் மலையோர கிராமங்களுக்குள் புகுந்து மீண்டும் அட்டகாசம் செய்வதுடன் விவசாயபயிர்களை பொருட்களையும் நாசம் செய்து வருவது, அப்பகுதி மக்களிடையே பெரும் பீதியை ஏற்படுத்தி வருகிறது.

## திருப்பூர் மாவட்ட விவசாயிகள் 14 பஸ்களில் செல்ல ஏற்பாடு

திருப்பூர் : கோவையில் மூன்று நாட்கள் நடக்கும் விவசாயிகளுக்கான தொழில்நுட்ப கண்காட்சியில் பங்கேற்க, திருப்பூர் மாவட்டத்தில் இருந்து 14 பஸ்களில், விவசாயிகள் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை சார்பில், கோவை மண்டல கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு தொடர்பான தொழில்நுட்ப கண்காட்சி மற்றும் கருத்தரங்கு, கோவை அவிநாசிலிங்கம் பல்கலை அருகில் உள்ள ராமலிங்கம் செட்டியார் மேல்நிலைப்பள்ளியில், வரும் 28 முதல் 30 வரை, காலை 10.00 முதல் இரவு 7.00 மணி வரை கண்காட்சி நடக்கிறது. 80 அரங்குகளில் கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்பு தொடர்பான கண்காட்சி, கருத்தரங்கு நடைபெற உள்ளது.

கோவை, திருப்பூர், நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில், இக்கண்காட்சி மற்றும் கருத்தரங்கு நடத்தப்படுவதால், அம்மாவட்டங்களை சேர்ந்த

விவசாயிகள், கோவை அழைத்துச் செல்லப்படுகின்றனர். திருப்பூர் மாவட்டத்தில் இருந்து 14 பஸ்களில் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.
கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி, ஆராய்ச்சி மைய தலைவர் செல்வராஜ் கூறுகையில், ""கால்நடை மருத்துவ கல்லூரி பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள், கருத்தரங்கில் பேச உள்ளனர்; பயனுள்ள அரிய தகவல்களை, விவசாயிகள் பெற முடியும். உணவு மீன்கள் வளர்ப்பு, அலங்கார மீன்கள் வளர்ப்பு, மண்ட லத்தில் உள்ள கால்நடை இனங்கள், கால்நடை வளர்ப்பில் கடனுதவி பெறும் வழிமுறை, மானி யங்கள், இன்சூரன்ஸ் திட்டங்கள் பற்றி விளக்கப்படும்," என்றார்.

## பருத்தி உற்பத்தி 3.50 கோடி பொதிகளாக இருக்கும் :பரப்பளவு குறைந்துள்ள நிலையிலும்



நடப்பு 2012-13ம் பருவத்தில் (அக்.,-செப்.,), நாட்டின் பருத்தி உற்பத்தி, 3.50 கோடி பொதிகளாக (ஒரு பொதி= 170 கிலோ) இருக்கும் என, இந்திய பருத்தி கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.அதேசமயம், இதற்கான தேவை, 2.65 கோடி பொதிகளாக இருக்கும். கையிருப்பையும் சேர்த்து 1.50 கோடி பொதிகள் உபரியாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

**சாகுபடி பரப்பு:**நாட்டின் பல முக்கிய மாநிலங்களில், காலம் தவறிய பருவ மழையால், நடப்பு பருவத்தில், பருத்தி சாகுபடி பரப்பளவு, 1.16 கோடி ஹெக்டேராக குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.இது, கடந்த, 2011-12ம் பருவத்தில், 1.22 கோடி ஹெக்டேராக சற்று அதிகரித்திருந்தது.ஆந்திரா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில், பருத்தி சாகுபடி நன்கு உள்ளதையடுத்து, ஒட்டு மொத்த அளவில், பருத்தி உற்பத்தியில், அதிக சரிவு ஏற்பட வாய்ப்பில்லை என, இந்திய பருத்தி கூட்டமைப்பின் தலைவர் தீரன் சேத் தெரிவித்தார். அதேசமயம், நடப்பு பருவத்தில், நாட்டின் பருத்தி உற்பத்தி, 3.34 கோடி பொதிகளாக இருக்கும் என, பருத்தி ஆலோசனை கழகம் மதிப்பிட்டுள்ளது.கடந்த ஒரு சில ஆண்டுகளாக, உள்நாட்டில், பருத்தி உற்பத்தி, தொடர்ந்து அதிகரித்து வருகிறது. எடுத்துக்காட்டாக, கடந்த 2001-02ம் பருவத்தில், நாட்டின் பருத்தி உற்பத்தி, 1.58 கோடி பொதிகளாக இருந்தது. இது, கடந்த 2011-12ம் பருத்தி பருவத்தில், 3.53 கோடி பொதிகளாக அதிகரித்தது. இதேபோன்று, இதே காலத்தில், பருத்தி சாகுபடி செய்யும் பரப்பளவும், 87.30 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 1.22 கோடி ஹெக்டேராக

அதிகரித்துள்ளது.

**உற்பத்தி திறன்:**கணக்கீட்டு காலத்தில், நாட்டின் பருத்தி உற்பத்தி திறனும், பன்மடங்கு அதிகரித்துள்ளது. கடந்த 2001-02ம் பருவத்தில், பருத்தி உற்பத்தி திறன், ஒரு ஹெக்டேருக்கு, 308 கிலோவாக இருந்தது. இது, கடந்த பருவத்தில், 500 கிலோவாக அதிகரித்தது.இதே காலத்தில், நாட்டில் பருத்தி ஏற்றுமதி வாயிலான வருவாய், 44 கோடி ரூபாயிலிருந்து, 14 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது என, தீரன் சேத் மேலும் கூறினார்.

**சர்வதேச நிலவரம்:**சர்வதேச அளவிலும், நடப்பு பருவத்தில், பருத்தி உற்பத்தி, அதிகரிக்கும் என, மதிப்பிடப் பட்டுள்ளது.சர்வதேச பருத்தி ஆலோசனைக் குழு வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில், நடப்பு பருவத்தில், உலகின் பருத்தி உற்பத்தி, 2.59 கோடி டன்னாகவும், இதற்கான தேவை, 2.34 கோடி டன்னாக இருக்குமென, மதிப்பிடப் பட்டுள்ளது.இதையடுத்து, உலகளவில், பருத்தி உபரி, 24 லட்சம் டன்னாக இருக்குமென, எதிர்பார்க்கப் படுகிறது. சீனாவில் பருத்தி பயன்பாடு குறைந்ததையடுத்து, சர்வதேச சந்தையில், பருத்தி வர்த்தகம், 21 சதவீதம் குறைந்து, 77 லட்சம் டன்னாக இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. அதே சமயம், உலகளவில், பருத்தி இறக்குமதி, கடந்த பருவத்தை விட, 18 சதவீதம் அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப் படுகிறது.

**விலை சரிவு :**சர்வதேச சந்தையில், நடப்பு 2012ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், 1 பவுண்டு பருத்தியின் விலை, 100.1 சென்டாக குறைந்திருந்தது. இது, மேலும் சரிவடைந்து, சென்ற நவம்பர் மாதத்தில், 80.87 சென்டாக குறைந்துள்ளது.இந்தியாவிலும், இதன் விலை, குறைந்து வருகிறது. அதாவது,நடப்பாண்டு ஏப்ரல் மாதத்தில், ஒரு கேண்டி (356 கிலோ) பருத்தியின் விலை,34,600 ரூபாயாக இருந்தது. இது, நவம்பர் மாதத்தில், 34,100 ரூபாயாக சரிவடைந்து உள்ளது.உலகளவில், பருத்தி உற்பத்தி, பயன்பாடு மற்றும் ஏற்றுமதியில், இந்தியா இரண் டாவது மிகப் பெரிய நாடாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

- பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து –

## பாசுமதி அரிசி விலை விர்ர் ...விற்பனை , ஏற்றுமதி பாதிப்பு



புதுடில்லி:பாசுமதி அரிசி உற்பத்தி குறைந்துள்ளதால், அதன் விலை உயர்ந்து வருகிறது. இதனால், இதன் உள்நாட்டு பயன்பாடும், ஏற்றுமதியும் குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.சென்ற 2011-12ம் நிதியாண்டில், இந்தியாவில், 42.50 லட்சம் டன் பாசுமதி அரிசி உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால், நடப்பு 2012-13ம் நிதி யாண்டில், இதன் உற்பத்தி, 10 சதவீதம் குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் எதிரொலியாக, உள்நாட்டில், பாசுமதி அரிசியின் விலை, 25 சதவீதமும், சர்வதேச சந்தையில், 25 முதல், 40 சதவீதம் வரையிலும் விலை உயர்ந்துள்ளது. இதனால், ஏற்றுமதியாளர்களின் லாப வரம்பு குறைந்துள்ளது.உள்நாட்டு சந்தையில், பிராண்டட் பாசுமதி அரிசி விலை, கிலோவுக்கு, 10-20 ரூபாய் வரை உயர்ந்து, 75 லிருந்து, 95 ரூபாயாக அதிகரித்துள்ளது.

இந்தியாவின் பாசுமதி அரிசிக்கு, சவுதிஅரேபியாவை அடுத்து ஈரானில் அதிக வரவேற்பு காணப்படுகிறது. ஆனால், ஈரான் உடனான பணப்பரிமாற்றப் பிரச்னையால், அந்நாட்டிற்கான, இந்தியாவின் பாசுமதி அரிசி ஏற்றுமதி குறைந்துள்ளது.எனினும், புதிய சந்தை வாய்ப்புகள் மூலம், பாசுமதி ஏற்றுமதியை அதிகரிக்கும் முயற் சியில் வர்த்தகர்கள் ஈடுபட்டுள்ளனர். நடப்பு நிதியாண்டில், 35 லட்சம் டன் பாசுமதி அரிசியை ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது, கடந்த நிதியாண்டில், 32 லட்சம் டன்னாக இருந்தது.நடப்பு நிதியாண்டில், தற்போது வரை, 21 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதிக்கு, பதிவு செய்யப்பட்டுள்ளது.

## வாழைப்பழம் ஏற்றுமதி 21,525 டன்னாக குறைவு



சென்னை:சென்ற 2011-12ம் நிதியாண்டில், இந்தியாவின் வாழைப்பழம் ஏற்றுமதி, 21,525 டன்னாகக் குறைந்துள்ளது என, இந்திய தொழிலக கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.சர்வதேச அளவில், வாழைப்பழம் உற்பத்தியில், பிரேசில், இந்தியா ஆகியவை முன்னணியில் உள்ளன.

இந்தியாவில், ஆண்டுக்கு, 9.07 கோடி டன் வாழைப்பழம் உற்பத்தியாகிறது.

தமிழகம்:அதேசமயம், சர்வதேச ஏற்றுமதி சந்தையில், இந்தியாவின் பங்களிப்பு, 0.02 சதவீதம் (30 ஆயிரம் டன்) என்ற அளவிலேயே உள்ளது.இந்தியாவில் பழங்கள் உற்பத்தியில், வாழைப்பழம் முதலிடத்தில் உள்ளது. நாட்டின் மொத்த வாழைப்பழம் உற்பத்தியில், மகாராஷ்டிரா, தமிழகம், மத்திய பிரதேசம், ஆந்திரா, குஜராத், கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் பங்களிப்பு, 68.67 சதவீதம் என்ற அளவில் உள்ளது.

தமிழகத்தில் மட்டும், 20க்கும் மேற்பட்ட வாழைப்பழ வகைகள் உற்பத்தியாகின்றன. தமிழகத்தில் விளையும் பழங்களில், வாழைப்பழம் முதலிடத்தில் உள்ளது. இதையடுத்து, மாம்பழம், திராட்சை, சப்போட்டா, கொய்யா, நெல்லி ஆகியவை உள்ளன.உள்நாட்டில், கடந்த 20 ஆண்டுகளில், வாழை பயிரிடும் பரப்பளவு, 2 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 6.20 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது. நாட்டில், உற்பத்தியாகும் மொத்த வாழைப்பழத்தில், பெங்களூரு பச்சைப் பழத்தின் பங்களிப்பு, 69 சதவீதம் என்ற அளவில் உள்ளது. இதைத் தொடர்ந்து, பூவம் பழம், 17 சதவீதமும், பச்சை வாழை, நேந்திரம், ரஸ்தாளி ஆகியவை, தலா 4 சதவீத பங்களிப்பையும் கொண்டுள்ளன.

இந்தியாவிலிருந்து, ஐக்கிய அரபு நாடுகள், சவுதி அரேபியா, ஈரான், குவைத், பக்ரைன், நேபாளம், கத்தார், ஓமன், மாலத்தீவு ஆகிய நாடுகளுக்கு, வாழைப்பழம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மதிப்பின் அடிப்படையில், இந்தியாவின் மொத்த வாழைப்பழம் ஏற்றுமதியில், இந்நாடுகளின் பங்களிப்பு, 4.50 கோடி ரூபாயாகும்.சர்வதேச அளவில், வாழைப்பழம் ஏற்றுமதியில், ஈக்வடார் நாடு, 18 சதவீத சந்தை பங்களிப்புடன் முதலிடத்தில் உள்ளது.

இதையடுத்து, கோஸ்டாரிகா, கொலம்பியா தலா, 12 சதவீத, பங்களிப்பையும் ஹோண்டுராஸ், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் தலா, 11 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ளன.ஏற்றுமதி:சென்ற நிதியாண்டில், இந்தியாவில் இருந்து, 736 கோடி ரூபாய் மதிப்பிலான, 2.57 லட்சம் டன் பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

இதில், வாழைப்பழத்தின் பங்களிப்பு, 21,525 டன்னாகக் குறைந்துள்ளது. இதன் மதிப்பு, 29.39 கோடி ரூபாய். சர்வதேச சந்தையில், வாழைப்பழத்தின் விலை குறைந்ததே இதற்கு காரணம் என, கூறப்படுகிறது.அதேசமயம், முந்தைய 2010-11ம் நிதியாண்டில், 81.19 கோடி ரூபாய் மதிப்பிலான, 34,711 டன் வாழைப்பழம் ஏற்றுமதி செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்


26.12.2012 A.M

## மேட்டூர் நீர்மட்டம் 32.64 அடி



மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர்மட்டம் 32.64 அடியாக உள்ளது.மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்கு நீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ள நிலையில், தற்போது குடிநீர் தேவைக்கு மட்டும் நீர் திறக்கப்படுகிறது. இதன்படி, நேற்று காலை 8 மணி நிலவரப்படி, அணையில் இருந்து வினாடிக்கு 500 கன அடி நீர் திறக்கப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 963 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நேற்று முன்தினம் 32.56 அடியாக நீர்மட்டம், நேற்று காலை 32.64 அடியாக அதிகரித்தது. நீர் இருப்பு 8.61 டிஎம்சி.நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை இல்லாததால், தொடர்ந்து நீர் வரத்து அதிகரிக்காமல் உள்ளது.

## முதல்வர் அறிவித்த நிவாரணம் ஏக்கருக்கு ரூ. 13,692 போதா து



திருச்சி: தமிழக அரசு அறிவித்த ஏக்கருக்கு ரூ.13,692 நிவாரண தொகை போதாது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.நடப்பாண்டு மேட்டூர் அணை காலம் தாழ்த்தி திறக்கப்பட்டதால் தமிழகத்தில் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டது. தண்ணீர் இல்லாததால் பல லட்சம் ஏக்கர் சம்பா சாகுபடி செய்த டெல்டா விவசாயிகள் பயிரை காப்பாற்ற வரூ.தெரியாமல் கண்கலங்கி நிற்கின்றனர். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். விவசாயிகள் வாங்கிய அனைத்து கடன் களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்நிலையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.13,692 வரை வழங்கப்படும் என தமிழக அரசு நேற்றுமுன்தினம் அறிவித்திருப்பது விவசாயிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருச்சி மாவட்ட தலைவர் மாசிலாமணி கூறுகையில், Ôபாதிக்கப்பட்ட விவசாயிகள் விபரீத முடிவு எடுக்க வேண்டாம் என அறிவித்திருப்பது விவசாயிகளுக்கு ஆறுதலாக இருந்தாலும், ஏக்கர் ஒன்றுக்கு ரூ.13,692 வரை வழங்கப்படும் என அறிவித்திருப்பது ஏமாற்றம் அளிக் கிறது.

குறுவை இழந்து, தற்போது சம்பாவையும் இழந்து தவித்து வரும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.30ஆயிரம், நிலமற்ற விவசாய தொரூ.லாளர்களுக்கு இந்த ஆண்டுக்கான நிவாரண தொகையாக ரூ.10 ஆயிரம் வழங்குவதோடு கடன்களையும் தள்ளுபடி செய்ய மத்திய, மாநில அரசுகள்  நடவடிக்கை எடுக்க வேண்டும்Õ என்றார்.திமுக விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் கருப்பண்ணன் கூறுகை யில், Ôஅரசு அறிவிப்பு, மே லும் விவசாயிகளை தற்கொலைக்கு தூண்டுவது போல் உள்ளது.  ஏக்கருக்கு குறைந்தது ரூ.30 ஆயிரம், மனிதாபிமான அடிப்படையில் ரூ.10ஆயிரம் சேர்த்து நியாயமான இழப்பீடாக ரூ.40ஆயிரம் வழங்க வேண்டும். வாங்கிய அனைத்து கடன்களை யும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றார்தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் அயிலை சிவசூரியன் கூறுகையில், Ôதற்கொலை சம்பவம் இனிமேல் தொடராமல் இருக்க ஏக்கருக்கு ரூ.30ஆயிரம் வழங்குவதோடு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வாங்கிய அனைத்து கடன்களை தள் ளுபடி செய்ய மத்திய அரசுக்கு, தமிழக அரசு வலியுறுத்த வேண்டும்Õ என்றார்.காங்கிரஸ் விவசாயி பிரிவு துணைத் தலைவர் புலியூர்நாகராஜன், பாரதீய கிசான் சங்கம் அய்யாக்கண்ணு ஆகியோரும் கடன்களை தள்ளுபடி செய்வதுடன், ஏக்கருக்கு ரூ.30ஆயிரம் நஷ்டஈடு வழங்க வேண்டும் எனக்கூறினர்.

**வங்கக் கடலில் காற்றழுத்தம் இன்று மழை பெய்யும் வாய்ப்பு**



சென்னை: வங்கக் கடலில் தென் கிழக்கு பகுதியில் காற்றழுத்தம் உருவாகியுள்ளது. இதையடுத்து இன்று மாலை தமிழக கடலோரத்தில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் வட கிழக்கு பருவ மழை முடிவடைய இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில், நேற்று முன்தினம் அந்தமான் அருகே ஒரு மெல்லிய காற்றழுத்தம் உருவானது. அது நேற்று மேலும் வலுப்பெற்று மேற்கு நோக்கி நகரத் தொடங்கியது. தற்போது அந்த காற்றழுத்தம் இலங்கைக்கு வடக்கே தென் கிழக்கு வங்கக் கடல் பகுதியில் மையம் கொண்டுள்ளது. இன்று மாலைக்குள் அந்த காற்றழுத்தம் தமிழக கடலோரப்பகுதிக்கு நெருங்கி வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் தென் மாவட்டங்களில் கன மழைபெய்யும். வட மாவட்ட கடலோரப் பகுதியில் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யும். தமிழகத்தின் உள் மாவட்டங்களில் இயல்பு வானிலை இருக் காது. வட மாவட்டங்களில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். கடல் மேற்பரப்பில் கடுமையாக காற்று வீசும். அதனால் கடலில் அலையின் சீற்றம் அதிகம் காணப்படும். எனவே மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளனர்

## வறட்சியால் வாடும் கரும்பு பொங்கலுக்கு விலை உயரும்



நெல்லை: நெல்லை மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள கரும்பு, வறட்சியால் வாடி வருகிறது. இதனால் பொங்கல் பண்டிகையை ஒட்டி கரும்பு விலை உயர வாய்ப்பு உள்ளது. நெல்லை

மாவட்டத்தின் பிரதான தொழிலான விவசாயத்தில் நெல்லும், வாழையுமே முக்கிய பயிர்களாகும். மாவட்டத்தின் சில பகுதிகளில் மட்டுமே கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட பணப்பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு தண்ணீர் பற்றாக்குறை காரணமாக பல விவசாயிகள் கரும்பு சாகுபடியை முழுமையாக மேற்கொள்ளவில்லை. கால்வாய் மற்றும் கிணற்று நீர் பாசனத்தை நம்பியே சில விவசாயிகள் கரும்பை பயிரிட்டுள்ளனர். ஆனால், வறட்சி காரணமாக பொங்கலுக்கு கரும்பு அறுவடை செய்ய முடியுமா என விவசாயிகள் தவிப்பில் உள்ளனர். இதுகுறித்து, நெல்லையை சேர்ந்த விவசாயி கணேசன் கூறுகையில், ''கரும்பு பயிரிடுவதற்கு இந்த ஆண்டு போதிய தண்ணீர் கிடைக்கவில்லை. கரும்பு பயிரிட அரை ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வரை செலவாகிறது. பொங்கல் முடிந்து அறுவை நடந்தால், கரும்பை குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலை ஏற்படும்' என்றார். நெல்லை மார்க்கெட்டுகளுக்கு தேனியில் இருந்து கரும்பு கொண்டு வரப்படுகிறது. ஒரு கட்டு(15) கரும்பு கடந்த ஆண்டு ரூ.250 முதல் ரூ.300 வரை விற்றது. உள்ளூரில் விளையும் கரும்புகள் ரூ.150 முதல் ரூ.200 வரை கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு கரும்பு விளைச்சல் இல்லாததால் அதன் விலை உயரும் என தெரிகிறது.

## 2011-12ம் ஆண்டில் வாழைப்பழம் ஏற்றுமதி ரூ.29 கோடியாக சரிவு



சென்னை: கடந்த ஆண்டில் வாழைப்பழம் ஏற்றுமதி மதிப்பு வெறும் ரூ.29.39 கோடியாக சரிந்தது. இதற்கு முந்தைய ஆண்டில் இது ரூ.81.19 கோடியாக இருந்தது. உலகிலேயே இந்தியா மற்றும் பிரேசில் நாட்டில்தான் வாழைப்பழம் உற்பத்தி அதிகமாக உள்ளது. ஆனாலும், இந்தியாவில் உள்நாட்டு தேவையும் அதிகமாக இருப்பதால், ஏற்றுமதி குறைவாக இருக்கிறது. உலக அளவில் ஆண்டுக்கு சராசரியாக 9 கோடியே 7 லட்சம் டன் வாழைப்பழம் ஏற்றுமதியாகிறது. இதில், இந்தியாவில் இருந்து ஏற்றுமதியாவது வெறும் 0.02 சதவீதம்தான் என்று இந்திய தொழில்துறை சம்மேளனம் தெரிவிக்கிறது. வாழைப்பழ ஏற்றுமதி குறித்து இந்த சம்மேளனம் வெளியிட்ட ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: உலக வாழைப்பழ உற்பத்தியில் 28 சதவீதம், இந்தியாவில்தான் உற்பத்தியாகிறது. எனினும், அதிகபட் சம் 3 லட்சம் டன் வாழைப்பழங்கள் மட்டுமே இங்கிருந்து ஏற்றுமதியாகிறது. இது உலக ஏற்றுமதியில் வெறும் 0.02 சதவீதம்தான்.

ஐக்கிய அரபு நாடுகள், சவுதி அரேபியா, ஈரான், குவைத், பஹ்ரைன், நேபாளம் போன்ற நாடுகளுக்கு இந்திய வாழைப்பழங்கள் ஏற்றுமதியாகின்றன. கடந்த 2010-11ம் ஆண்டில் இந்தியாவில் இருந்து ரூ.81.19 கோடி மதிப்புக்கு வாழைப்பழங்கள் ஏற்றுமதியாயின. ஆனால், 2011-12ம் ஆண்டில் இது வெறும் ரூ.29.39 கோடியாக சரிந்துள்ளது. மொத்தம் 21,525 டன் ஏற்றுமதியாயின. இந்த ஆண்டில் மொத்த பழங்கள் ஏற்றுமதி ரூ.735.83 கோடியாக இருந்தது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## விவசாயத்துக்கு தனி பட்ஜெட் ஆந்திர அரசு திட்டம்



ஐதராபாத் : கர்நாடகா மாநிலத்தை போலவே வேளாண்மைத் துறைக்கு தனி பட்ஜெட் போடுவதற்கான பணிகளில் ஆந்திர அரசு மும்முரமாக ஈடுபட்டுள்ளது. நாட்டிலேயே முதல்முறையாக கர்நாடகா அரசு வேளாண்மைக்கு தனியாக பட்ஜெட் தாக்கல் செய்தது. அதேபோல ஆந்திராவிலும் பட்ஜெட் போடுவதற்காக அம்மாநில விவசாயத்துறை அமைச்சர் லட்சுமிநாராயணா, உயர் அதிகாரிகளுடன் பெங்களூருக்கு சென்று பட்ஜெட் முறைகள் குறித்து ஆய்வு செய்தார். பின்னர், அது தொடர்பாக முதல்வர் கிரண்குமார் ரெட்டியிடம் அறிக்கை தாக்கல் செய்தார். இதனையடுத்து நிதியமைச்சகம் பட்ஜெட் தயாரிப்பு குறித்து ஆய்வு செய்து வருகிறது. ஆனால், இந்த ஆண்டே விவசாயத்துக்கு தனி பட்ஜெட் தாக்கலாகுமா என்று தெரியவில்லை.